காரைக்கால் மாவட்ட நிர்வாகம்
செய்திக்குறிப்பு நாள்: 13.05.2019

# காரைக்கால் மாவட்ட ஆட்சியர் விடுத்துள்ள அறிவிப்பு

காரைக்கால் மாவட்டத்தில் இயங்கும் கடைகள் மற்றும் அவற்றை சார்ந்த அலுவலகங்கள், பண்டக அறைகள், கிடங்குகள், வர்த்தக நிறுவனங்கள், திரையரங்குகள் மற்றும் பொழுதுபோக்கு இடங்கள், எரிவாயு உருளைகள் / வாகன எரிபொருள் விநியோகம் செய்யும் நிறுவனங்கள், தனியார் மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரிகள், காப்பீட்டு நிறுவனங்கள், மருந்து நிலையங்கள், மருத்துவ பரிசோதனைக் கூடங்கள், வர்த்தக சபை, தனியார் வங்கிகள், நிதி நிறுவனங்கள், அரசு சார்பு மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள், STD பூத்கள், தொலைத்தொடர்பு சேவை மையங்கள், விவசாய பண்ணைகள், தாவர நாற்றங்கால் நிலையங்கள், கோழிப்பண்ணைகள், மீன்-இறால் பொரிப்பகங்கள், தொண்டு நிலையங்கள் அல்லது சங்கங்கள் பதிவு சட்டம் 1860 கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கங்கள், இறைச்சிக் கூடங்கள், பாதுகாப்பு முகமைகள், தனியார் விரைவு அஞ்சல் பணி நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனைச் சார்ந்த சேவை நிறுவனங்கள் ஆகிய நிறுவனங்களையும் புதுச்சேரி கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் 1964-ன் கீழ் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று புதுச்சேரி அரசு தொழிலாளர் துறை ஆணையர் திரு. வல்லவன் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

எனவே, இதுவரை காரைக்கால் மாவட்டத்தில் பதிவு செய்யாதவர்கள் காரைக்கால், மதகடி, காமராஜர் வளாகம், 2-வது தளம், தொழிலாளர் துறை, தொழிலாளர் அதிகாரி அலுவலகத்தில் ஒரு மாத காலத்திற்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும், ஏற்கனவே பதிவு செய்தவர்கள் உரிய தொகை செலுத்தி புதுப்பித்துக்கொள்ள வேண்டும் என்று காரைக்கால் மாவட்ட நிர்வாகம் சார்பில் தெரிவிக்கின்றேன்.

மேலும் தொழிலாளர்களுக்கு அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஊதியத்திற்கு குறையாமல் ஊதியம் வழங்குவதை பணியமாத்துபவர்கள் உறுதி செய்ய வேண்டும். தவறும்பட்சத்தில் சம்பந்தபட்ட உரிமையாளர், ஒப்பந்ததாரர் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று இதன் மூலம் தெரிவிக்கின்றேன்.

Information & Publicity Department * Karaikal *